விலை ரூபா ஒன்று

முரசு 1 11-1-1985 வெள்ளிக்கிழமை (ரத்தாக்ஷி மார்கழி 27) முழக்கம் 170

## இரண்டு பெண்கள் உட்பட மூதூரில் நேற்று ஐவர் கைது!

மூதூர் பகுதியில் நேற்றுத் தேடுதல் வேட்டை நடத்திய பாதுகாப்புப் படையினர் இரண்டு பெண்கள் உட்பட ஐவரைக் கைது செய்து மேல்விசாரணைக்காகக் கொண்டு சென்றனர். ஆலிம்நகர் என்ற இடத்தில் தேடப்பட்ட வாலிபர் அகப்படாததால் அவரது தாயும், சகோதரி முறையான ஒருவரும் கைதாகினராம். வெருகல் பகுதி விசேஷ சேவை உத்தியோகஸ்தரான பஞ்சலிங்கம் என்பவரும் கைதானவர்களில் ஒருவராவார். மற்றுமிரு இளைஞர்கள் மூன்றும் கலனியில் கைதாகினர்.

# இலங்கையின் மறுப்பை பாரதம் ஏற்கவில்லை? தமிழககடற்பகுதியில்இந்தியகடற்படை காவல்!

(சென்னை)

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களிலிருந்து இந்திய மீனவரைக் காப்பாற்ற தமிழ் நாட்டுக் கடலோரப்பகுதிகளில் இந்தியக் கடற்படையின் கண்காணிப்பு அதிகமாக்கப்பட்டுள்ளது. தனுஷ்கோடிக்கருகே இரு இந்திய மீனவர்கள்கொல்லப்பட்டதையடுத்தே மத்திய அரசு கண்காணிப்பை அதிகமாக்கியுள்ளது.

அடிக்கடி தென்னிந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையும் அக்கறையுமடைந்துள்ள இந்திய அரசு அதனாலேயேகண்காணிப்பை அதிகமாக்கியுள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவரது கூற்றிலிருந்து தனுஷ்கோடிச் சம்பவத்துக்குத் தம்பொறுப்பல்ல என்ற இலங்கையரசின் மறுப்பறிக்கையைப் பாரதம் ஏற்கவில்லையென்பது புலனாவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய மீனவர் தாக்கப்பட்டது குறித்துஉடன் நடவடிக்கையெடுக்குமாறு ராமேஸ்வரம் மீனவர் சங்கம் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுள்ளது. இலங்கைக்கடற்படையினர் கடலில் எறிந்த மீனவர் ஒருவரின் சடலத்தைக் கண்டுபிடிக்க நடவடிக்கையெடுக்குமாறும் இறந்தவர்களது குடும்பங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளது.

அச்சுவேலி சம்பவம்

# 14பேர்கொலை; 44பேர்கைது ஆயுதக் குகை கண்டுபிடிப்பு!

## இலங்கையைத் தாக்க இந்தியாவிலிருந்து ஆயுதங்கள் வந்ததாகவும் லலித் அறிவிப்பு

(கொழும்பு)

அச்சுவேலியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் நடத்திய திடீர்த் தாக்குதலினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை அலுலகமொன்று நிர்மூலமாக்கப்பட்டதாகவும், புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவரென்று கூறப்படும் 'பண்டிதர்' என்பவர் உட்பட பதினைன்கு முக்கியஸ்தர்கள் கொலைசெய்யப்பட்டதாகவும், மேலும் நான்கு முக்கிய புள்ளிகள் உட்பட நாற்பத்திநான்கு பேர் கைதானதாகவும், பெருந்தொகையான ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று மாலை பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினா நடாத்திய "மிகப்பெரிய வெற்றிகரமான தாக்குதல்" என்று அமைச்சர் இதனை வர்ணித்த அதே வேளையில், அச்சுவேலிச் சம்பவத்தில் மூன்று சிறுவர்களும் ஒருவயோதிபரும் உட்பட பதினொரு பேர் படையினரால் கொல்லப்பட்டதாக இந்திய வானொலிச் செய்தி நேற்று அறிவித்தது.

அச்சுவேலிச் சம்பவங்கள் பற்றி நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் சில விபரங்களைத்

—2-ஆம் பக்கம் பார்க்க

## சேமக்காலையில் அரைகுறையாக எரியுண்ட ஆண்களின் சடலங்கள்

நேற்று முன்தினம் நடைபெற்ற அச்சுவேலிச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் என்று கூறப்படும் சுமார் பத்துப்பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கொன்சென்ஸி மாதா சேமக்காலையில் ஒன்றுகக் குவித்து எரிக்கப்பட்டன.

நேற்றுக்காலை இந்தச் செய்தி நகரம் முழுவதும் பரவியதால் பெரும்தொகையான மக்கள் அங்கு சென்று அரையும் குறையுமாக எரிந்துகிடந்த சடலங்களைப் பார்வையிட்டனர். சடலங்களின் மண்டை ஓடுகளை எண்ணிய ஒருவர் பத்துக்கும் மேற்பட்டவர்கள்எரிக்கப்பட்டதாகவும், சிறுவர்களின் சடலமும் காணப்பட்டதாகத் தெரி

—2-ஆம் பக்கம் பார்க்க

### பாஸ் இல்லாத வானின் கதி

நேற்று சாவகச்சேரியில் இருந்து யாழ்–நகர் வந்தமினி

—2-ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் சுட்டுக் கொல்லப்பட்ட மூவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

அச்சுவேலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான மூவரின் சடலங்களை இராணுவத்தினர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். மூன்று சடலங்களும் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு சடலம் மட்டுமே நேற்று மாலைவரை அடையாளம் காணப்பட்டது. அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த வல்லிபுரம் ஆறுமுகம் (56) என்ற வயோதிபரின் சடலத்தை அவரது மருமகனை முன்னாள் மாவட்டசபைத் தலைவர் நடேசு இராஜேந்திரன் அடையாளம் காட்டினார்.

மரணமான ஆறுமுகம் முன்னாள் கிராமசபைத் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆஸ்பத்திரியிலுள்ள மற்றிரு சடலங்களும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான மற்றொரு சிறுவனும், வயோதிபர் ஒருவரும் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### வண. பஸ்தியன் வீடியோ படம்

(மானிப்பாய்)

படுகொலை செய்யப்பட்ட வண. பிதா. மேரி பஸ்ரியான் அடிகளின் ஆத்ம சாந்திக்காக அவரது முன்னாள் தேவாலயமான மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்

– 2-ஆம் பக்கம் பார்க்க

தலைவர் சிவா அறிக்கை :

## மகஜர் அனுப்பி பயனில்லை மக்கள் சலித்து வட்டனர்!

(உடுப்பிட்டி)

வங்காலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், "அமைச்சர் அத்துலத் முதலி அண்மையில் வடபகுதி மக்கள் ராணுவத்தினர் பற்றிக் குறை கூறுவதில்லை" என்று கூறியுள்ளார். ஆனல் அவருக்கு வடக்கு கிழக்கு மாகாண மக்கள், ஸ்தாபனங்கள், மத அரசியல் தலைவர்கள் மகஜர்களும், புகார்களும் தெரிவித்தும் பயனில்லை என்பதை உணர்ந்து சலித்துப்போய் இருக்கிறார்கள் என்பதை அவர் உணரவேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

—2-ஆம் பக்கம் பார்க்க

### இவர்களுக்கு நாளை பென்சன்

யாழ். கச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் ஒய்வூதியத்தைப் பெற்றவர்களுக்கு நாளை 12 ம் திகதி சனிக்கிழமை குருநகர் இலங்கை வங்கிக் கிளையில் ஒய்வூதியம் வழங்கப்படும். நாளை பெறத்தவறுபவர்கள் 15 ம் திகதி பெறமுடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

ஜனதிபதியிடம் பிரஜைகள் குழு

## சைக்கிள் பர்மிட் முறையை ரத்தாக்குமாறு கோருவர்!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருமலை, வல்வட்டித்துறை பிரஜைகள் குழுக்களின் முக்கிய பிரதிநிதிகள் குழுவொன்று இன்று ஜனதிபதி ஜெயவர்த்தனவை கொழும்பில் சந்தித்துப் பேசவிருக்கின்றது.

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது, முகாம்களில் தடுத்துவைக்கப்படுவது, பொதுமக்கள் கண்டபடி சுட்டுக் கொலை செய்யப்படுவது போன்ற விடயங்கள் இப்பேச்சுவார்த்தையின் போது

2-ஆம் பக்கம் பார்க்க

நேற்று மிக எளிமையாக

## தமிழாராய்ச்சி மாநாட்டு தியாகிகள் நாள் அனுஷ்டிப்பு

1974ம் ஆண்டு தமிழாய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்த பத்துத் தமிழ் தியாகிகள் நினைவுதினம் நேற்றுக் காலை வீர்சிங்கம் மண்டபத்துக்குமுன்னுள்ள அவர்களது ஸ்தூபிக்கு மலர்மாலை சூட்டப்பட்டு மிகவும் எளிமையாகக் கொண்டாடப்பட்டது

இவ்வைபவத்துக்கான ஒழுங்குகளை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் செய்திருந்தார். முன்னை நாள் யாழ் துணை முதல்வர் எம் எம்

2–ம் பக்கம் பார்க்க

### பாரிய குழியில் கவச வண்டி

ஆரியகுளம் சந்தியருகே குண்டு வெடித்த குழியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற கவச வண்டி ஒன்று புதையுண்

—2ம் பக்கம் பார்க்க

# ஈழமுரசு

## எம்.ஜி.ஆர். சாதாரண விமானத்தில் இரு வாரத்தில் திரும்புவார்!

(நியூயோர்க்)

தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி இராமச்சந்திரன் இன்னமும் இரு வாரங்களில் தமிழகம் திரும்பக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது இவர் புறப்படக் கூடிய திகதி குறித்து நிதியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் டாக்டர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இவர் இருவாரங்களில் மருத்துவமனையிலிருந்து மீளலாம் என்றும், பொருத்தப்பட்ட மாற்றுச் சிறுநீரகம் சீராகச் செயற்படுகிறதென்றும் இப்போது உடற்பயிற்சியும், பேச்சுப் பயிற்சியுமே அளிக்கப்படுகிறது என்றும் புறூக்லின் மருத்துவமனை டாக்டர் பெல்ஸ்கி நேற்றுத் தெரிவித்தார்.

முதல்வருக்கு முன்னர் போல் விசேட சாதனங்கள் பொருத்தப்பட்ட விமானம் அவசியமில்லை என்றும், சாதாரண விமானத்தில் பயணம் செய்யக் கூடிய உடல் வலுவுடன் இருக்கிறாரென்றும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார், திரு. நெடுஞ்செழியன் ஞாயிற்றுக்கிழமை சென்னை திரும்பவுள்ளார்.

### அமிர் தெரிவித்த கருத்து:

# தமிழக மீனவர் கொலை பாரத அரசை அவமதிக்கும் செயல்!

(சென்னை)

''பாரதக் கடலாதிக்கப் பிராந்தியத்தில் பெருகிவரும் இலங்கைக் கடற்படைத் தாக்குதல்கள் பாரதத்தை அவமதிக்கும் திட்டமிட்ட செயலாகும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை பிரதமர் திரு. ராஜீவ் காந்தியால் எடுக்கப்படவேண்டுமென வலியுறுத்திய அவர் இன்னமும் மூன்று அல்லது நான்கு நாட்களில் தானும் திரு. சிவசிதம்பரமும் பிரதமரையும், திரு. பார்த்தசாரதியையும் சந்தித்து இதுபற்றிப் பேசவிருப்பதாகவும் தெரிவித்தார், அதேவேளையில் ராமேஸ்வரம். பாம்பன் கடல்பகுதிகளில் தமிழக மீனவர்களைப் பாதுகாத்துக் கண்காணிக்கும் வகையில் பாரதத்தின் இரு கடற்படைக் கப்பல்களும், ஒரு ஹெலிகொப்டரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தென்று நேற்று மதுரையிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இடத்தை ஆட்சித் தலைவா திரு குருமூர்த்தி நேற்றுப் பார்வையிட்டார். கொலையுண்ட மீனவர்களுக்கு இரங்கல் தெரிவித்து ராமேஸ்வரத்தில் மீனவர் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது.

## தமிழூராய்ச்சி...

—1-ஆம் பக்கத் தொடர்

அலோஷியஸ், டாக்டர் வைத்திலிங்கம், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஜவுதும், திரு. சிறில், முன்னாள் அபிவிருத்திச் சபை உறுப்பினர் ஜனுப் சுல்தான், திரு. தமிலவாயம், ஆகியோர் காலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஸ்தூபிகளுக்கு மலர்மாலை சூடினர்.

மகளிர் உட்பட பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்த சர்வமத கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## பாஸ் இல்லாத..

—1-ம் பக்கத் தொடர்

வான், கைதடியில் படையினரைக் கண்டதும் ஒரு தொழிற்சாலையினுள் புகுந்தது. படையினரும் அத்தொழிற்சாலையை சூழ்ந்து விசாரணை நடாத்திய பின்னர் அந்த மினிவான் பாஸ் இன்றி வந்தது தெரிய வந்தது, வான் சாரதி உட்பட அதன் பிரயாணிகளும் தாக்கப்பட்டனராம்.


### விற்பனைக்கு

குரும்பசிட்டி வவுனத்தம்பர் ரோட்டுக்கு அருகாமையில் 8 பரப்பு தோட்டக்காணி தென்னை வருமானங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

த. தவராசா,
ஞானவைரவர் கோவிலடி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
சுன்னாகம்.

### விற்பனைக்கு

நல்லூரில் கந்தசாமி கோவிலிருந்து 300யார் தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். K. வேலாயுதபிள்ளை, 141, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.


# முல்லை. அகதி முகாம்களில் பலருக்கும் தொற்று நோய்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அகதிகள் முகாமில் இடநெருக்கடியாலும் சுகாதாரமின்மை காரணமாகவும் பலருக்கு வயிற்றோட்டம், சின்னமுத்து போன்ற நோய்கள் ஏற்பட்டுள்ளது இதை உடனடியாக கட்டுப்படுத்த தேவையான மருந்துகள் முல்லைத்தீவு வைத்திய நிலையத்தில் இல்லாததால் இந்நோய்கள் எல்லோருக்கும் பரவக்கூடிய ஆபத்துஏற்பட்டுள்ளது. இதை உடனடியாக தடுப்பதற்கு தேவையான மருந்து வகைகளை வழங்கும் பணியில் செஞ்சிலுவைச் சங்கமும்(?) தென்னிந்திய திருச்சபையும் தற்போது ஈடுபட்டுள்ளன,

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்து முகாம்களில் தங்கியுள்ள சுமார் 9000 அகதிகளுக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபா தொண்ணூறுசதம் என்ற அடிப்படையில் அரசாங்கம் பணம் வழங்கி வருவதால் மிகுந்த கஷ்டமான நிலையில் இவர்கள் வாழ்க்கையை கழிக்க வேண்டியநிலையிலுள்ளார்கள். பல பொது ஸ்தாபனங்கள் தங்களால் முடிந்த நிவாரணப் பணிகளை செய்து வருகிறது.

அண்மையில் இம்முகாம் ஒன்றுக்கு வந்த சீருடையினர் இவ்வகதிகளை மீண்டும் தங்களின் பழைய இடங்களுக்கு செல்லுமாறும் ''இனி வந்து குடியேறும் சிங்களவர்களுக்கு நீங்களே பாதுகாப்பு அவர்களுக்கு ஏதாவது நடந்தால் உங்களுக்கு ஆபத்து'' என்றுமிரட்டியதாகவும். தங்களின்சொந்த கிராமங்களில் மீண்டும் சென்று குடியேற பயமாகவிருப்பதாகவும் இவ்வகதிகள் கூறுகின்றனர்.

## 14 பேர் கொலை...

—1-ஆம் பக்கத் தொடர்

தெரிவித்த அமைச்சர் அத்துலத்முதலி, பின்னர் பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை விபரித்துக் கூறினர். அண்மையில் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட ஜப்பானியபிக்குவின் புகைப்படமும். அடையாள அட்டையும் இங்கிருந்து மீட்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுச் சொன்னர்.

இந்தியாவில் கொண்டுவரப்பட்ட எம் 16, ஏ.கே. 14 சுழல்துப்பாக்கிகளுடன் சப்மெஷின் கன்கள், குண்டுகள், கிரனேட்டுகள், ஐம்புதுகண்ணி வெடிகள், ஆயிரத்து இருநூறு பல்வேறு ரகத்தைச் சேர்ந்த துப்பாக்கி ரவைகள் மேலும் பல ஆயுதங்கள் குறிப்பிடப்பட்ட வீட்டின் நிலத்துக்கு அடியிலிருந்து மீட்கப்பட்டதாகவும் சொன்ன அமைச்சர் அத்துலத்முதலி, இந்தியாவில் பயிற்சி பெற்ற [illegible] யினர் இலங்கையைத் தாக்க இன்றைய சூழ்நிலையில் வந்திருந்தார் [illegible] பொதுமக்களின் [illegible] இவை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

நேற்றும் ஆயுதப்படையினர் அச்சுவேலியிலும் தொண்டைமானாற்றிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், இதனுல் பொது மக்கள் வீடுகளை விட்டு அருகில் ஓடியதாகவும் எமது நிருபர் அறிவித்துள்ளார்.

## வண. பஸ்தியன்...

1-ம் பக்கத் தொடர்

தில் நேற்றுக்காலை மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையில் நடைபெற்ற கூட்டுப்பலிக்கு மானிப்பாயின் பல பங்குகளிலுமிருந்து பெருந்திரளானோர் ஊர்வலமாகச் சென்றனர் அங்கு நடைபெற்ற ஆராதனையில் பலர் வாய்விட்டழுதனர், இறுதியில் அடிகளின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வீடியோ படமொன்றும் காண்பிக்கப்பட்டது. இவ் ஆராதனையில் மதபேதமின்றி மக்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பாரிய குழியில்..

—1ம் பக்கத் தொடர்

டதால் நகரில் சிறிது பதற்றமேற்பட்டதுடன், போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகியது. இரண்டு மணித்தியாலத்தின் பின் கொண்டு வரப்பட்ட பாரம்தூக்கி மூலம் புதையுண்ட கவசவண்டி அங்கிருந்து வெளியே எடுக்கப்பட்டது. அப்போது பல கவசவாகனங்கள் அப்பகுதியைக் காவல் புரிந்ததால் மக்கள் பரபரப்படைந்தனர்.

## மகஜர் அனுப்பி.

1-ம் பக்கத் தொடர்ச்சி

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற திரு. சிவசிதம்பரம், நேற்று மாலை விமான மூலம் சென்னை செல்லவிருந்தார்.

## வயர்லஸ் கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மின்சார சபையில் இனந்தெரியாத இளைஞர் சிலரால் அங்கிருந்த 'வயர்லஸ் கருவி கொள்ளையடித்துச் செல்லப்பட்டது

## அவர் இவரே

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினமிரவு 'மரணதண்டனை' பெற்றவர் பளையைச் சேர்ந்த அமரசிங்கம் சிவனேசன் என்பவராவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டமைக்காக ஈழபுரட்சி கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழீழ கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மரணதண்டனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உங்களுடையதா?

முத்துக்கம்பி நடராசா என்பவரின் 1215301 39V இலக்கமுடைய அடையாள அட்டை சுண்டுக்குளி தபால் நிலையத்தில் இருந்து தபாலதிபரால் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

கந்தசாமி தவரூபன் என்பவரது மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ், கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## சேமக்காலையில்...

—1-ம் பக்கத் தொடர்

வித்தார். பல சடலங்களின் கால்களிலும் செம்மண் சேறு காய்ந்துகிடக்கக் காணப்பட்டதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

''நாம் மறுவாழ்வில் நம்பிக்கை உடையவர்கள். சேமக்காலை எமது பரிசுத்தமான இடமாகும் இங்கு சடலங்களை இவ்வாறு எரித்து அநாசாரப்படுத்திவிட்டார்கள்'' என்று யாழ் பேராலய பங்கு நிர்வாகத்தினர் மிகுந்த கவலையுடன் தெரிவித்தனர்

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் மீண்டும் சேமக்காலைக்கு வந்த சீருடையினர் எரியுண்ட சடலங்களைப் பார்வையிட்டுச் சென்றனர்.

## சைக்கிள் பர்மிட்...

—1-ம் பக்கத் தொடர்

முக்கிய இடத்தைப் பெறுமென யாழ் பிரஜைகள் குழு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்

வடபகுதியில் புதிதாக அமுல் செய்யப்படும் கட்டுப்பாடுகளால் இங்குள்ள மீனவர்கள் தொழிலின்றி வாழ்க்கை நடாத்துவதில் படும் இன்னல்கள் பற்றியும் இச் சந்திப்பின்போது எடுத்துக்கூறப்படவுள்ளது.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாக இருந்துவரும் 'சைக்கிள் பர்மிட்' விஷயமாக இன்றைய ஜனாதிபதியின் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படுமெனவும் தெரியவந்துள்ளது. குடாநாட்டு ஏழைமக்களினதும், மாணவர்களினதும் போக்குவரத்துச் சாதனமாக விளங்கும் சைக்கிளுக்கு 'பர்மிட்' வழங்குவதை நிறுத்தும்படி பிரமுகர்கள் ஜனாதிபதியிடம் வற்புறுத்தவுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## 24 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

முல்லைத்தீவு மாவட்டத்தில் [illegible] 24 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதில் 14 பாடசாலைகள் அகதிகள் முகாமாக மாறியுள்ளன. 8 பாடசாலைகள் தமிழ் குடும்பங்கள் வெளியேற்றப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

## இரண்டு கொள்ளைகள்

(கிளிநொச்சி)

பரந்தன் விவசாயப் பண்ணையில் அடுத்தடுத்து இரண்டு கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டு உழவு இயந்திரங்களில் வந்த ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்று 185 மூடை நெல்லையும் விவசாய உபகரணங்களையும் கொள்ளையடித்து தாங்கள் கொண்டு வந்த உழவு இயந்திரங்களில் ஏற்றிச் சென்றனர். அடுத்தநாள் லொறியொன்றில் வந்த இளைஞர் கோஷ்டியொன்று அதே பண்ணையில் மிஞ்சியிருந்த விவசாய உபகரணங்களையும் மற்றும் சில பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றதாக 7ம் திகதி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் ஐந்து லட்சத்துக்கு மேல் வரும் எனக் கூறப்படுகிறது.

## கிளிநொச்சி வந்துள்ள அகதிகள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவிலும் நொச்சிகாமத்திலும் வன்செயல்களினல் பாதிக்கப்பட்ட இருபத்தொன்பது குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூறுபேர் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் கடந்த 4ம் திகதி பாதிக்கப்பட்ட போக்குவரத்துச் சீர்கேடு காரணமாக உடனே வரமுடியாமல் பின்னர் சுமார் ஐந்து வாகனங்களில் மாறி மாறி பிரயாணம் செய்ததாகக் கூறினர். இவர்களில் பதினொரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நொச்சிகாமத்தையும் பதினெட்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவையும் சேர்ந்தவர்களாவர். இவர்கள் மேற்படி இடங்களில் சுமார் பதினெட்டு வருடங்களாக வசித்து வந்த விவசாயிகளாவர்.

நொச்சிகாமத்தை சேர்ந்த அகதிகள் முரசுமோட்டை இளைஞர் விவசாய சங்கத்தினராலும், முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சி பரந்தன் [illegible] கழகத்தினராலும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.


'ஈழமுரசு' சாய்பாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில்
11-1-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.